கிருபையுள்ள வார்த்தை®

KIRUBAIYULLA VAARTHAI

லூக்கா (LUKE) 4:22

VOL - 27
ஆண்டு சந்தா ரூ. 100/-

ஜூலை - JULY
தனிப் பிரதி ரூ. 10/-

2026
வெளிநாட்டு சந்தா ரூ. 1,000/-

கர்த்தாவே, என்னைக் குணமாக்கும்,
அப்பொழுது குணமாவேன்;
என்னை இரட்சியும்,
அப்பொழுது இரட்சிக்கப்படுவேன்;..

எரேமியா 17:14



இடம்: மெரினா கடற்கரை, சென்னை

ஆசிரியர் Dr. பிலேமோன் ராஜா

புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்தை மீட்டமைக்கும் இதழ்

இதழின் உள்ளே...

ஆசிரியர் உரை	3
பெண்கள் பகுதி	7
வாலிபர் பகுதி	9
சிறுவர் பகுதி	11
ஓராண்டில்... வேதவாசிப்பு	

In Memory of J.C. CHOATE

Guest Editors : **Betty Choate, Jerry & Paula Bates**

Editor : **Dr. P.C. PHILEMON RAJA** Ph.D.,

ஆசிரியர் குழு

V. கிங்ஸ்லி ராஜா, M.S. (IT&M)., M.Th.,
R. ஆண்டனி ராஜா, D.Th.,
E. ஜோசப் பிரதீப், B.Th., **C. கியாமிஸ் கார்த்திக்,** B.Sc.,
P. பேபி ராஜா, D.Th., **P. பெவர்லி லிடியா** B.B.A.,

சட்ட ஆலோசகர்கள்
அட்வகேட் **B. கருப்பசாமி பாண்டியன்** B.A., B.L.
அட்வகேட் **V. சுப்பிரமணியன்** M.A., B.L.

கிருபையுள்ள வார்த்தை TV நிகழ்ச்சிகள்

தமிழன் T.V. யில்

ஞாயிறு காலை 7.00 மணி

நம்பிக்கை T.V. யில்

ஞாயிறு மதியம் 3.30 மணி

செய்தியாளர்கள்

போதகர். **பிலேமோன் ராஜா** M.A., M.Th.,
(Director - JC School of Evangelism)

சகோ. **கிங்ஸ்லி ராஜா** M.Th.,
(இணை ஆசிரியர் – கிருபையுள்ள வார்த்தை)

இந்த மாதம் பிறந்த நாள் மற்றும் திருமண நாள் காணும் வாசகர்கள் அனைவருக்கும் அன்பின் வாழ்த்துக்கள்...



மாதந்தோறும் பார்வையற்ற மாற்றுத்திறனாளிகளுக்கு அரிசி வழங்கப்படுகிறது.

கிருபையுள்ள வார்த்தை
நம் ஆத்துமாவை உயிர்ப்பிக்கும்
உன்னதமான பிதாவின் வார்த்தை

YouTube
@graciouswordcoc

World Literature Publication : Kirubaiyulla Vaarthai, Post Box No. 15, Arasaradi, Madurai - 625 016. India

ஆத்தும மருத்துவர்
SOUL HEALER



- P.C. பிலேமோன் ராஜா

அன்பான கிருபையுள்ள வார்த்தை வாசகர்கள் அனைவருக்கும், இறைமைந்தன் இயேசுகிறிஸ்துவின் இனிதான பெயராலே எனது அன்பின் வாழ்த்துக்கள் மற்றும் ஜெபங்கள்.

ஜூலை மாதம் முதல் தேதியை நமது நாட்டில் மருத்துவர் தினமாக அனுசரிக்கின்றனர். உயர்ந்த சேவையாகிய மருத்துவ சேவை செய்கின்ற அனைவரும் அன்பின் வாழ்த்துக்கள். இந்த மாதம் எந்த மருத்துவராலும் குணப்படுத்த முடியாத, ஆத்தும நோயை குணப்படுத்தும் ஒப்பற்ற மருத்துவராகிய ஆண்டவர் இயேசு கிறிஸ்துவை பற்றி தியானம் செய்வோம்.

1. ஆத்துமாவை தாக்கும் நோய்கள் என்ன?

வேதாகமத்தின்படி சரீரத்தைக் கொல்லுவது மட்டும் மரணம் இல்லை. ஆத்துமாவை கொல்லுவதும் (படைத்தவரை விட்டு பிரிப்பதும்) மரணம் ஆகும். ஆத்துமாவிற்கு மரணத்தினை வரவழைக்க கூடியவைகள் (நோய்கள்) பற்றி பைபிள் தெளிவாக பேசுகின்றது.

அ. பாவங்கள்

எவையெல்லாம் பாவம் என நாம் வினவினால், பரிசுத்த ஆவியானவர் பாவங்களை பற்றிய நீண்ட பட்டியலை தருகின்றார். அதனை ரோமர் 1:18-32 ஆகிய வசனங்களில் நாம் அறிந்துக்கொள்ள முடியும். இந்தப் பாவங்களை நாம் சிந்தனையினாலோ, வார்த்தையினாலோ மற்றும் செயல்களினாலோ செய்கின்றோம்.

ஒரு துளி நஞ்சு (விஷம்) ஒரு பானை சோற்றையும் நஞ்சாக்கிவிடுவது போல, ஒரே ஒரு பாவம் கூட, முழு ஆத்துமாவையும் மரிக்க செய்துவிடுகின்றது. கர்த்தருடைய தாசனாகிய மோசே (எண்ணாகமம் 20:1-13), லோத்தின் மனைவி (ஆதியாகமம் 19:12-26) அதற்கு மிகச்சிறந்த உதாரணங்களாக இருக்கின்றனர். ஆகையால், நாம் பாவ நோயினைப் பற்றி விழிப்புள்ளவர்களாக இருப்போம்.

ஆ. உலக சிநேகம்

யாக்கோபு 4:4 விபசாரரே, விபசாரிகளே, உலகசிநேகம் தேவனுக்கு விரோதமான பகையென்று அறியீர்களா? ஆகையால் உலகத்துக்குச் சிநேகிதனாயிருக்க விரும்புகிறவன் தேவனுக்குப் பகைஞனாகிறான்.

கர்த்தருக்கு விரோதமான உலக நட்பும் நமது ஆத்துமாவை கொல்லக் கொடிய நோய் தான். இந்த பிரபஞ்சத்தின் மீது கொண்ட ஆசையினால், தேமா தன் ஆத்துமாவை இழந்துப்போனார் (2 தீமோத்தேயு 4:10). ஆகையால் தான் நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து, நீங்கள் உலகம் முழுவதையும் ஆதாயம் செய்தாலும், உங்கள் ஆத்துமாவை நஷ்டப்படுத்தினால், லாபம் ஒன்றுமில்லை என்று, தம்மடியவர்களை எச்சரித்தார் (மத்தேயு 16:24-27).

மேலும், அவர் தான் உலகத்தான் அல்லாதது போல, தம்முடையவர்களும் உலகத்தார் அல்ல என்றார் (யோவான் 17:14), தனது அரசும் இவ்வுலகத்திற்கு உரியது அல்ல என்றார் (யோவான் 18:36). நாம் இந்த உலத்தில் தான், நமது ஆண்டவர் இயேசுவை போல, அவர் காண்பித்த அடிச்சுவடிகளில், அவரை காண்பிக்கும்படி வாழ வேண்டும். மாறாக, நமக்குள் இந்த உலக வழிபாடுகளை கொண்டுவந்து விடக்கூடாது. அது ஆபத்து. சத்துருவானவன் இந்த உலகத்தினையும் அதிலுள்ள யாவற்றையும் காண்பித்து, ஆசையை தூண்டியபோது, நமது ஆண்டவர் இயேசு, அப்பாலே போ சாத்தானே என்று அவனையும், அவன் தூண்டிய உலக ஆசையையும், துரிதமாக செயல்பட்டு துரத்தியதுபோல, நாமும் செயல்படுவோம் (மத்தேயு 4:8-10). உலகத்திலும். உலகத்தில் உள்ளவைகளிலும் அன்புக்கூராதிருப்போம் (1யோவான் 2:15-17).

இ. மாய்மாலமான வாழ்க்கை

மத்தேயு 23:13 மாயக்காரராகிய வேதபாரகரே!

பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, மனுஷர் பிரவேசியாதபடி பரலோகராஜ்யத்தைப் பூட்டிப்போடுகிறீர்கள். நீங்கள் அதில் பிரவேசிக்கிறதுமில்லை, பிரவேசிக்கப் போகிறவர்களைப் பிரவேசிக்க விடுகிறதுமில்லை.

நமது ஆண்டவர் இயேசு, மாய்மாலமான வாழ்க்கை வாழ்கிறவர்கள் பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பதில்லை, அதாவது தங்கள் ஆத்துமாவை நரகத்தில் கொண்டு சேர்க்கின்றனர், மேலும், இப்படிபட்டவர்கள் மிகவும் ஆபத்தானவர்கள். ஏனெனில் அவர்கள் மற்றவர்களையும் நித்திய வாழ்விற்குள் போகவிடாதபடி தடுக்கின்றார்கள் (தடையாக இருக்கின்றார்கள்) என எச்சரித்தார்.

அது என்ன மாய்மாலமான வாழ்க்கை? மத்தேயு 23, 15 மற்றும் மாற்கு 7 ஆகிய அதிகாரங்கள் மாய்மாலமான வாழ்க்கை என்றால் என்ன? என்பதனை குறித்து தெளிவாக விளக்குகின்றது. அவர்கள் ஒரு நாடக நடிகர்களை போல, இடத்திற்கு ஏற்றபடி நடிக்கின்றவர்களாக இருக்கின்றனர். அதாவது, இரண்டும்கெட்டா வாழ்க்கை வாழ்கின்றவர்கள். அப்படி பட்டவர்களை. நமது ஆண்டவர் இயேசு, வாந்தி பண்ணிப்போடுவேன் என எச்சரித்தார் (வெளிப்படுத்தல் 3:15,16).

மாய்மாலக்காரர் என்பவர், வலது கையில் கிறிஸ்துவையும், பாரம்பரியத்தையும் (மத்தேயு 15:1-6), இடது கையில் கிறிஸ்துவையும், மனித போதனைகளையும் (மத்தேயு 15:7-11), வலது கையில் கிறிஸ்துவையும், இடது கையில் நியாயப்பிரமாணத்தையும் (கலாத்தியர் 5:1-4), வலது கையில் கிறிஸ்துவையும், இடது கையில் உலகத்தையும் (யாக்கோபு 4:1-4), வலது கையில் கிறிஸ்துவையும், இடது கையில் சாத்தானையும் (மத்தேயு 6:24) என எதிரிடையான இரண்டையும், ஒரே நேரத்தில் ஒன்றாக இணைத்து, பயணம் செய்ய விரும்பும் பாசாங்குகாரர் ஆவர். அப்படிப்பட்டவர்களை கிறிஸ்து, நேடியாகவும் மிகவும் உறுதியாக (கடினமாக) எதிர்த்தார் (மத்தேயு 23).

ஈ. பின்மாற்றம்

எபிரெயர் 10:38,39 - விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான், பின்வாங்கிப் போவானானால் அவன்மேல் என் ஆத்துமா பிரியமாயிராது என்கிறார். நாமோ கெட்டுப்போகப் பின்வாங்குகிறவர்களாயிராமல், ஆத்துமா ஈடேற விசுவாசிக்கிறவர் களாயிருக்கிறோம்.

பின்வாங்கி போகின்றவர்கள், தங்கள் ஆத்துமாவை இழக்கின்றனர் (சாகடிக்கின்றனர்). கற்றுக்கொண்ட சத்தியத்தினைவிட்டும், கர்த்தரைவிட்டும், கர்த்தருடைய சபையைவிட்டும் விலகி செல்கின்றவர்கள் ஒவ்வொருவருமே தங்கள் ஆத்துமாவை கொல்லுகின்றவர்களாக இருக்கின்றனர்.

ஒருவர் பின்வாங்கி போக காரணங்கள் நிறைய இருக்கலாம். அது அவரது அவிசுவாசம் (எபிரெயர் 3:19), அவர் வாழ்வில் வந்த உபத்திரவம் (மத்தேயு 13:21), அவருக்கு ஏற்பட்ட உயர்வாகிய ஆசீராகவும் இருக்கலாம் (மத்தேயு 13:22; உபாகமம் 6:10-12), மேலும், கிறிஸ்துவின் போதனைக்கு மாறுபட்ட போதனைகள் அதாவது கள்ள போதனைகள் (2 தீமோத்தேயு 4:1-4; 2யோவான் 7-11), மற்றும் அவர்களுடைய சுயநீதி (ரோமர் 10:3; பிலிப்பியர் 3:9-11) போன்றவைகளாகவும் இருக்கலாம்.

எவர் ஒருவரும் பின்வாங்கி போக காரணம் எதுவாயினும், அப்படி பின்வாங்கி போகின்றவர்கள் தங்கள் நித்திய வாழ்வை இழந்து, தங்கள் ஆத்துமாவை நித்திய தண்டனைக்கு (மரணத்திற்கு) உட்படுத்துகின்றனர் (2பேதுரு 2:20-22). இப்படிபட்டவர்களை புதுபிக்கின்றது கூடாத காரியம் (எபிரெயர் 6:1-6) என்று எபிரெயருக்கு எழுதப்பட்ட நூலின் ஆசிரியர் அறிவுறுத்துகின்றார். ஆண்டவர் இயேசுவும் எச்சரிக்கின்றார். லூக்கா 9:62 அதற்கு இயேசு: கலப்பையின்மேல் தன் கையை வைத்துப் பின்னிட்டுப்பார்க்கிற எவனும் தேவனுடைய ராஜ்யத்துக்குத் தகுதியுள்ளவன் அல்ல என்றார். ஆகையால் விழிப்புடன் இருப்போம்.

2. ஆத்துமாவை தாக்கும் நோயின் விளைவுகள் என்ன?

ஆத்துமாவை தாக்குகின்ற பாவ நோய்கள், ஆத்துமாவை தீட்டுபடுத்துகின்றன மற்றும் கொல்லுகின்றன என பைபிள் நமக்கு வெளிப்படுத்துகின்றது.

அ. தீட்டுபடுத்தும் (கறைபடுத்தும்)

மத்தேயு 15:18-20 வாயிலிருந்து புறப்படுகிறவைகள் இருதயத்திலிருந்து புறப்பட்டுவரும். அவைகளே மனுஷனைத் தீட்டுப்படுத்தும். எப்படியெனில்,

இருதயத்திலிருந்து பொல்லாத சிந்தனைகளும், கொலைபாதகங்களும், விபசாரங்களும், வேசித்தனங்களும், களவுகளும், பொய்ச்சாட்சிகளும், தூஷணங்களும் புறப்பட்டுவரும். இவைகளே மனுஷனைத் தீட்டுப்படுத்தும். கைகழுவாமல் சாப்பிடுகிறது மனுஷனைத் தீட்டுப்படுத்தாது என்றார்.

நமது ஆண்டவர் இயேசு, பாவங்கள் மனிதனுடைய இருதயத்திலிருந்து புறப்பட்டு வருவதால், அவைகள் மனிதனுடைய ஆத்துமாவை தீட்டுப்படுத்துகின்றன அதாவது கறைப்படுத்துகின்றன என்று சொன்னார். நாம் செய்கின்ற பாவங்கள், வெளியே தெரியாவிடினும், உள்ளிருக்கும் ஆத்துமாவை தீட்டுப்படுத்துவதாக இருக்கின்றன.

ஆ. கொல்லும்

எசேக்கியேல் 18:4 இதோ, எல்லா ஆத்துமாக்களும் என்னுடையவைகள். தகப்பனின் ஆத்துமா எப்படியோ, அப்படியே மகனின் ஆத்துமாவும் என்னுடையது. பாவஞ் செய்கிற ஆத்துமாவே சாகும்.

எல்லா ஆத்துமாக்களும், அதனை படைத்தவராகிய பரம பிதாவிற்கு சொந்தமானவைகள். ஆயினும் அந்த ஆத்துமா, பாவம் செய்கின்ற போது மரிக்கின்றது. அதாவது அதற்கு சொந்தமான படைத்தவரைவிட்டு பிரிகின்றது. உடலைவிட்டு உயிர் (ஆவி) பிரிவது சரீர மரணம். ஆத்துமா கர்த்தரை விட்டு பிரிவது, ஆத்தும மரணமாகும்.

பாவம் செய்கின்ற போது மரிக்கின்ற ஆத்துமா, மனந்திரும்பாத பட்சத்தில் நித்தியமாகவே மரித்துவிடுகின்றது. ஏனெனில், ஆத்துமாவை கர்த்தரை விட்டு பிரிக்கிறதும், அந்த ஆத்துமாவை நித்திய ஜீவனை இழக்க வைக்கிறதும், அந்த ஆத்துமாவை நித்தியமாக கொல்வதாகும். பாவத்தின் சம்பளம் மரணம் (ரோமர் 6:23).

3. ஆத்துமாவை குணப்படுத்த செய்ய வேண்டியது என்ன?

1பேதுரு 1:19,23 குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்களென்று அறிந்திருக்கிறீர்களே. அழிவுள்ள வித்தினாலே அல்ல, என்றென்றைக்கும் நிற்கிறதும் ஜீவனுள்ளதுமான தேவவசனமாகிய அழிவில்லாத வித்தினாலே மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறீர்களே.

ஆத்துமாவை தாக்குகின்ற நோய்கள் என்ன வேண்டுமானாலும் இருக்கலாம். ஆயினும் அதனை குணப்படுத்தும் மருத்துவர் ஒருவரே, அவரே ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து. மருந்து அவருடைய மாசற்ற, விலையேறப்பெற்ற இரத்தமும், அழிவில்லாத வசனமும் தான்.

ஆகையால். ஒருவர் தன் ஆத்துமாவை காப்பாற்ற, கிறிஸ்துவினை பற்றிய சத்தியத்தினை கேட்டு (ரோமர் 10:17; எபே1:13), விசுவாசித்து (மாற்கு 16:16), பாவ வாழ்விலிருந்து மனந்திரும்பி (அப்போஸ்தலர் 3:20; லூக்கா 13:3), கிறிஸ்துவின் மேலுள்ள விசுவாசத்தினை அறிக்கையிட்டு (அப்போஸ்தலர் 8:37; ரோமர் 10:10), பாவ மன்னிப்பிற்கென்று திருமுழுக்கு பெற வேண்டும் (அப்போஸ்தலர் 2:38; 22:16).

அப்பொழுது அவர் தன் ஆத்துமாவை கிறிஸ்துவின் இரத்தத்தினாலே, அவருடைய வார்த்தையின்படி கழுவபட்டு சுத்தமாகி (1யோவான் 1:7, எபேசியர் 5:26, 27), பாவத்தினாலே மரித்த தன் ஆத்துமாவை கிறிஸ்துவிற்குள், கிறிஸ்துவினாலே உயிர்பித்துக்கொள்ள முடியும்; (ரோமர் 6:1-5).

வாசகர்களின் கவனத்திற்கு

அன்பான வாசகர்களே!
உங்கள் ஆண்டு சந்தா தொகையை
G-Pay, PhonePe மூலம் அனுப்பி
உங்கள் சந்தாவை
புதுப்பித்துக் கொள்ளவும்.
நன்றி!

ஆண்டு சந்தா : ரூ. 100/-

Ph.No. 92 4421 4421

வங்கிக் கணக்கில் செலுத்த,

A/c Name : Kirubaiyulla Varthai
A/c No. : 57022317422
IFSC Code : SBIN0011068
Branch : SBI - Bye Pass Road Branch, Madurai.

அவ்வாறு மீட்கப்பட்ட (குணமாக்கப்பட்ட) ஆத்துமாவை மீண்டும் பாவ நோய் தாக்கினால், அதிலிருந்து தன் ஆத்துமாவை காப்பற்றிக்கொள்ள, செய்த பாவத்திலிருந்து முழுமையாக மனந்திரும்பி, செய்த பாவத்தினை அறிக்கையிட்டு, உண்மையாக பரம பிதாவை நோக்கி ஜெபிக்கும் போது, உண்மையும் நீதியுமுள்ள ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து, மீண்டும் அந்த நபரை சுத்திகரிக்கின்றார் (1யோவான் 1:7-10).

ஆகையால், மீட்கப்படாதவர்கள் (ஆத்தும மரணத்தை அடைந்தவர்கள்) இன்றே மனந்திரும்பி, பாவமன்னிப்பிற்கென்று திருமுழுக்கு (ஞானஸ்நானம்) பெறுவோம். பெற்று பின்பு பரம தகப்பனோடு ஒப்புரவாகுவோம். இன்றே இரட்சணிய நாள். இப்பொழுதே அநுக்கிரக்காலம் என்ற பரிசுத்த ஆவியானவரின் அறைகூவலை அலட்சியம் செய்ய வேண்டாம் (2கொரிந்தியர் 6:2; எபிரெயர் 3:7).

4. மீண்டும் நோய் வராதிருக்க செய்ய வேண்டியது என்ன?

மீண்டும் பாவ நோய் நம்மை தாக்கி, நம் ஆத்துமாவை தீட்டுப்படுத்தாமலிருக்கவும், சாகடிக்கமாலிருக்கவும் செய்ய வேண்டிய வற்றையும் பரிசுத்த ஆவியானவர் வெளிப்படுத்தி யிருக்கின்றார். அவை ஒன்று சத்தியம், இரண்டாவதாக சபை, மூன்றாவதாக ஊழியம் ஆகும்.

அ. சத்தியம்

சங்கீதம் 119:9 வாலிபன் தன் வழியை எதினால் சுத்தம்பண்ணுவான்? உமது வசனத்தின்படி தன்னைக் காத்துக்கொள்ளுவதினால்தானே.

ஆகையால், தினமும் அடிக்கடி நேரம் ஒதுக்கி கர்த்தருடைய வேதத்தினை வாசிப்போம். தியானிப்போம், ஆராய்வோம் மற்றும் நமக்குள்ளே வாசம்பண்ணுகின்ற பரிசுத்த ஆவியானவர் வழிநடத்துகின்ற, கிறிஸ்துவின் சகல சத்தியத்திற்குள்ளும் நடப்போம் (யோவான் 16:13-15).

ஆ. சபை

அப்போஸ்தலர் 2:47 தேவனைத் துதித்து, ஜனங்களெல்லாரிடத்திலும் தயவுபெற்றிருந் தார்கள். இரட்சிக்கப்படுகிறவர் களைக் கர்த்தர் அநுதினமும் சபையில் சேர்த்துக்கொண்டு வந்தார்.

அடுத்ததாக, சபை (கர்த்தருடைய குடும்பம்). ஆகையால், சபையாக கூடிவருகின்ற ஒவ்வொரு தருணங்களையும் தவறவிடாதிருப்போம் (எபிரெயர் 10:24,25).

இ. ஊழியம்

1 பேதுரு 2:9 நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்.

அடுத்ததாக, ஊழியம், அதாவது நம் ஆத்துமாவை பாவத்திலிருந்து மீட்ட, நம் ஆண்டவர் இயேசுவை பற்றி, சமயம் வாய்த்தாலும், வாய்க்காவிட்டாலும் சொல்லிக் கொண்டே இருப்போம் (2தீமோத்தேயு 4:2). அது நம் மேல் விழுந்த கடமையாகவும் இருக்கின்றது (1கொரிந்தியர் 9:16) என்பதனை மறவாமல் செயல்படுத்துவோம். நாம் மற்ற ஆத்துமாக்களை பாவ நோயிருந்து குணப்பட உதவும்போது, நம்முடைய ஆத்துமாவை உள்நோக்கிப் பார்த்து சீர்செய்து கொள்கிறோம். ஆகையால், குறைந்தது ஒரு நாளைக்கு, ஒரு நபருக்காவது, ஒரு நிமிடமாவது செலவழித்து, ஒரு கைபிரதியாவது கொடுத்து கிறிஸ்துவின் நற்செய்தியை அறிவிப்போம்.

இறுதியாக, பிரியமானவர்களே! நமக்குள் இருக்கும் ஆத்துமா விலையேறப்பெற்றது, அதற்கு ஈடாக யாதொன்றையும் கொடுக்க இயலாது. ஏனெனில் அது எல்லாம் வல்ல பிதாவின் சாயலில் உண்டாக்கப்பட்டதாகும் (ஆதியாகமம் 1:26,27). ஆகையால் நமது ஆத்தும மீட்பை பற்றி விழிப்புள்ளவர்களாக இருப்போம் (எபிரெயர் 2:1-4). நமது ஆத்துமாவை மீட்ட நமது ஆண்டவர் இயேசுவை அனைவருக்கும் அறிவித்து, அவர்கள் ஆத்துமாவும் குணப்பட செயல்படுவோம். கர்த்தர் உங்களை அவ்வாறே செயல்பட ஆசீர்வதித்து வழிநடத்துவராக.

– அன்புடன், ஆசிரியர்

விசுவாசத்தோடே அணுகுவோம்!

அன்புள்ள சகோதரிகள் அனைவருக்கும், ஆண்டவர் இயேசு இராசாவின் பெயரில் வாழ்த்துக்கள்! ஜெபங்கள்!

பிரியமானவர்களே, இந்த மாதம் வேதாகமத்தில் இருந்து நாம் கற்றுக்கொள்ளப் போகிற காரியம், 'நம்முடைய விசுவாசத்தினால் இயேசுவை நெருங்குவோம்!' என்பதே.

வேதாகமத்திலே புதிய ஏற்பாட்டில், (மாற்கு 5:25) 12 வருடங்களாக பெரும்பாடுள்ள ஒரு பெண்ணின் வாழ்க்கையைப் பற்றி பார்க்கின்றோம். அவள் உடல் வேதனையினாலும், மன வேதனையினாலும், சமூகத்தில் பிரச்சனை மற்றும் பொருளாதார இழப்புகளை அனுபவித்தாள். ஆனால் இயேசுவை சந்தித்த அந்த நேரம் அவளுடைய வாழ்வு முழுமையாக மாறியது.

மாற்கு 5:25,26 - அவளுடைய நிலை மிகவும் வேதனையுள்ளதாக இருந்தது. 12 வருடம் இரத்தப் போக்கினால் கஷ்டப்பட்டாள். பல வைத்தியர்களிடம் சென்றும், எவ்வளவு செலவு செய்தும் குணமடையாத நிலை. ஆம் பிரியமானவர்களே! மனிதர்களின் உதவிக்கு எல்லை உண்டு. பணத்தால் எல்லாவற்றையும் வாங்க முடியாது; மனிதனால் எல்லாம் முடியாது ஆனால், தேவனால் முடியும். நமக்கு உதவி பிதாவாகிய கடவுளிடத்தில் இருந்தே வரும். (சங்கீதம் 121:1,2).

அவள் இயேசுவைப் பற்றி கேள்விப்பட்டபோது, அது அவளிடத்தில் விசுவாசத்தை உண்டாக்கினது (ரோமர் 10:17). நாம் தேவ வார்த்தையைக் கேட்கும்போது, நமக்குள் விசுவாசம் வளர்கின்றது. நம் பிரச்சனைகள் பெரிதாக இருந்தாலும், தேவ வார்த்தை அதைவிட பெரியது.

அவள் விசுவாசத்தோடே இயேசுவை தொட்டாள்: (மாற்கு 5:28).

அவள் கூட்டத்தைப் பார்த்துப் பின்வாங்கவில்லை, பயப்படவில்லை. அவள் நோக்கம், கவனம் முழுவதும் இயேசுவின் மீது மட்டுமே இருந்தது.

அதினால் இயேசுவின் ஆடையின் ஓரத்தை தொட அவளுக்கு வாய்ப்பு கிடைத்தது; சுகம் பெற்றாள்.

நாமும் நம் வாழ்வில் எத்தனை தடை வந்தாலும் நமக்குள் இருக்கும் இயேசுவின் மீதான விசுவாசம், தடைகளைத் தாண்டி அவரிடம் செல்ல உதவும் (எபி. 11:6).

இயேசுவின் வல்லமை அவளைத் தொட்டது: (மாற்கு 5:29,30)

அவள் இயேசுவின் ஆடையின் ஓரத்தை தொட்டவுடனே சுகம் கிடைத்தது. இத்தனை வருட பாடுகள் அந்த நொடியிலேயே பூரணமாக சரியானது (லூக்கா 4:36).

(தொடர்ச்சி... 8ம் பக்கம்)

அறிந்து கொள்வோம்

மாதம் ஒரு "பூ"

குரவம்



குரவ மலர் பற்றிச் சங்கப்பாடல்கள் தரும் செய்திகள்:
குரவ மலரின் நனை - அரும்புகள் மரக்கிளைகளில் பசுமை நிறத்தில் காணப்படும்.
குரவம் என்னும் மலர் கொத்துக் கொத்தாகப் பூக்கும்.
நறுமணம் மிக்க குரவம் பூவைப் 'பாவை' என்பர்.
குரவம் காட்டில் பூக்கும் மலர்.
குரவமரம் நீண்ட நீண்ட கிளைகளை (வலார் போன்ற கிளைகளை) உடையது. இதன் பூக்களைக் குயில்கள் விரும்பி உண்டு அதில் வாழும்.
குரவம்பூ மிகுதியான மகரந்தப் பொடிகளை உடையது.

திணை	:	தாவரம்
பிரிவு	:	கலன்றாவரம்
வகுப்பு	:	Magnoliopsida
வரிசை	:	Gentianales
குடும்பம்	:	காஃபி குடும்பம்
பேரினம்	:	Tarenna
இனம்	:	Tarenna asiatica

அவர் நம் நோய்களை மட்டும் குணமாக்குபவர் அல்ல. நம் மனதையும், நம் குடும்பத்தையும், நம் வாழ்க்கையையும் மாற்றுபவர், புதிதாக்குபவர்.

அவளின் விசுவாசம் அவள் வாழ்வில் முழுமையான மாற்றத்தைக் கொண்டு வந்தது (மாற்கு 5:34).

இயேசுவை நாம் விசுவாசத்தோடே அணுகும்போது நம் வாழ்வில், அவர் நமக்கு சுகம், சமாதானம், புதிய வாழ்க்கை தருகிறார். (யோவா. 10:9,10).

பிரியமானவர்களே! நாமும், நம் வாழ்வில் நீண்ட நாட்களாக இருக்கும் பிரச்சனைகளைக் கண்டு சோர்ந்துப் போகக்கூடாது.

மனிதர்களை விட இயேசுவை நாம் முழுமையாக நம்ப வேண்டும். தேவ வார்த்தையை கேட்டு, விசுவாசத்தை வளர்த்துக் கொள்ளுங்கள்.

ஜெபத்தில் உறுதியாக இருந்து இயேசுவை விசுவாசத்தோடே அணுகுங்கள்.

12 வருடங்களாக யாராலும், எந்த மனிதனாலும் சரி செய்ய முடியாததை இயேசு ஒரு நொடியில் சரி செய்தார். இன்றும் நம் வாழ்விலும் வல்லமையோடே செயல்படுகிறார்.

நம் கண்ணீர், பிரச்சனை எவ்வளவு பெரிதாக இருந்தாலும் இயேசுவின் கிருபை அதைவிட மேலானது (எரே. 32:27).

விசுவாசத்தோடே அவரை நெருங்குவோம். சுகம், சமாதானம், புதிய வாழ்க்கை அருளுவார்.

கர்த்தரின் கிருபையோடு, அடுத்த இதழில் சந்திப்போம்!

சகோதரி. பெவர்லி கிங்ஸ்லி

உணவு நோயாக மாறுவது இப்படிதான்

13 குறிப்புகளைப் பின்பற்றினால் ஆரோக்கியம் உறுதி

1. நின்று கொண்டு சாப்பிடும் பழக்கத்தை மாற்றி. குடும்பத்துடன் அமர்ந்து ஒன்றாய் சாப்பிடுங்க...
2. எந்த வகை சாப்பாடாக இருந்தாலும் நன்றாக மென்று, கூழாக்கி சாப்பிடுங்கள்...
3. பேசிக் கொண்டு, தொலைக்காட்சி, புத்தகம் பார்த்து கொண்டே சாப்பிட கூடாது...
4. சாப்பிடும்பொழுது இடையில் தேவையில்லாமல் தண்ணீர் குடிக்காதிங்க. கடைசியில் தண்ணீர் குடிக்க மறக்காதீங்க. போதிய அளவில் தண்ணீர் பருகுங்கள்...
5. அவசர அவசரமாக சாப்பிட வேண்டாம்...
6. பிடிக்காத உணவுகளை கஷ்டபட்டு சாப்பிட வேண்டாம்...
7. பிடித்த உணவுகளை அளவுக்கு அதிகமாகவும் சாப்பிட வேண்டாம்...
8. ஆரோக்கிய உணவுகளை அதிகம் சாப்பிட பழகவும்...
9. இரவு உணவில், முள்ளங்கி மற்றும் கீரை உணவுகளை சேர்க்க வேண்டாம்...
10. சாப்பாட்டுக்கு அரை மணிநேரம் முன்பு பழங்கள் சாப்பிடுங்கள்... பின்பு பழங்கள் சாப்பிட வேண்டாம்...
11. சாப்பிடும் முன்பு சிறிது நடந்துவிட்டு பின்பு சாப்பிடவும். இரவு சாப்பிட்ட பின், நடப்பது நலம்...
12. சாப்பிட வேண்டிய நேரம்... காலை – 7 மி.லி. 9 மணிக்குள், மதியம் – 1மி.லி. 3 மணிக்குள், இரவு – 7 மி.லி. 9 மணிக்குள்
13. சாப்பிட்டு 2 மணி நேரம் கழித்து தான் தூங்க வேண்டும்...

எது உன்னையான பொக்கிஷம்

மத்தேயு 13:44-46

பிரியமான வாலிபர்களே! உங்கள் அனைவருக்கும் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். நாம் தொடர்ந்து ஆண்டவர் இயேசுவின் உவமைகளையும், அதன் ஆவிக்குரிய அர்த்தங்களையும் கற்றுக் கொண்டு வருகிறோம். இந்த மாதமும் ஒரு உவமையை படிக்கலாம்.

மத்தேயு 13:45-ல் "பரலோக ராஜ்ஜியமாகிய சபையை" ஆண்டவர் நல்ல முத்துகளைத் தேடுகிற வியாபாரிக்கு ஒப்பாக பேசினார். அந்த முத்தை ஒரு வியாபாரி கண்டு, தனக்கு உண்டான அனைத்தையும் விற்று, அதனை வாங்குகிறார். ஆனபடியால் இயேசு, பரலோக ராஜ்ஜியமாகிய சபையை விலையேறப்பெற்ற "முத்து" போன்றது என்கிறார்.

இந்த உவமையின் மூலம் நாம் ஒரு எளிமையான கருத்தை புரிந்துகொள்ள முடியும். சபைக்கு



முன்பாக கர்த்தருக்கு எதுவும் பெரிதானதாக தெரியவில்லை. சபை எல்லாவற்றையும் விட மதிப்புமிக்கது, விலையேறப்பெற்றது, மகத்துவமானது, மகிமையானது.

இளைஞர்கள் இன்று பலவற்றை தேடுகிறார்கள்.

★ பணம் ★ புகழ் ★ வெற்றி

★ அங்கீகாரம் ★ சமூக ஊடக "லைக்ஸ்"

ஆனால் இவை எதுவுமே நிரந்தரமானது அல்ல.

சபை மட்டுமே நிலையான முத்து, மற்ற அனைத்துமே ஒருநாள் நம்மை விட்டு போய்விடும் பைபிளில் பவுல் என்னும் ஒரு நபர் பிலிப்பியர் 3:7,8-ல் "எல்லாவற்றையும் நஷ்டமும் குப்பையுமாக விட்டேன்" என்று சொல்கிறார். அவர் சரியான ஒன்றை, நிலையான ஒன்றை தெரிந்து கொண்டார்.

ஒரு நல்ல வேலை, தொழில், உன் பூமிக்குரிய தற்காலிக வாழ்க்கையே மாற்றலாம். ஆனால், இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தின் மூலம் திருமுழுக்கு பெற்று, இரட்சிக்கப்பட்டு, சபையாகிய

(தொடர்ச்சி... 10ம் பக்கம்)

சிறுவர்களுக்கான கேள்விகள்

1. யோசேப்பைப்போல நாம் உயர்த்தப்படுவது நாம் எப்படியிருக்க வேண்டும்?
2. சாலமோன் தேவாலயத்தைக் கட்டிமுடிக்க எத்தனை வருடங்களானது?
3. சாலமோனைப்போல நாம் முதலாவதாக செய்ய வேண்டிய காரியம் என்ன?
4. அசரியா ராஜாவானபோது அவருக்கு வயது என்ன?
5. யோனா கர்த்தரைப் பற்றி தான் எதை அறிந்திருப்பதாக சொன்னார்? யோனாவின் ஜெபத்திற்கு கர்த்தரின் பதில் என்ன?

சிறுவர் பகுதி பதில் எழுதியவர்கள்

1.	V. ஏஞ்சல் ஜோயன்னா -	மதுரை
2.	M. ஜோனத்தான் -	கரூர்
3.	A. ஹன்னா ஜோதிராணி -	மதுரை
4.	J. நவீன் பீட்டர் -	மதுரை
5.	J. கிறிஸ்டினா ஜாய்ஸ் -	மதுரை
6.	S. ஜூடா லியோ -	ரஸ்தா
7.	G. ஜெர்லின் -	ரஸ்தா
8.	D. டேப்னி -	சென்னை
9.	D. ஜூனித்தா -	சென்னை

விலையேறப்பெற்ற முத்தை நீ பெற்றுக்கொள்ளும் போது, ஆண்டவர் இயேசு உன்னை நித்திய வாழ்க்கைக்கு உரியவராக மாற்றுகிறார்.

இன்று கர்த்தர் உன்னிடம் (உங்களிடம்) கேட்பது:

1) உங்கள் நேரம் 2) உங்கள் மனம்

3) உங்கள் விசுவாசம் 4) உங்கள் கீழ்ப்படிதல்

ஏனென்றால், திருவசனம் சொல்கிறது, மத்தே 6:21 "உங்கள் பொக்கிஷம் எங்கே இருக்கிறதோ, அங்கே உங்கள் இருதயமும் இருக்கும்"

எதற்காக அதிகமான நேரம் செலவிடப்படுகிறது?

1) Instagram? 2) Reels?

3) Games? 4) Netfix?

5) Prayer - ஜெபம்? 6) Bible - வேதம்?

யோசிப்போம்! விலையேறப்பெற்ற முத்தை (சபையை), இராஜ்ஜியத்தை நமக்காக பரம பிதாவாகிய கர்த்தர் இயேசுவை விலையாக கொடுத்து வாங்கி இருக்கிறார்.

சபையாகிய விலையேறப்பெற்ற முத்தை அதிகமாக தேடும்படி முயற்சி செய்வோம். அதற்கு முன்பாக,

★ தவறான நட்பை விட்டுவிடு ★ பாவ பழக்கத்தை விடு

★ அகந்தையை விடு ★ சோம்பலை விடு

★ உலக ஆசைகளை விடு.

எரே. 29:13 - முழு இருதயத்தோடு, விசுவாசத்தோடு கர்த்தரையும், அவருடைய விலையேறப்பெற்ற முத்தாகிய சபையையும் தேடினால் கண்டடையும் கிருபை உண்டு.

எனவே, அருமையானவர்களே! சபைக்கானதை தேட முயற்சிப்போம். நிலையில்லாதவைகளை வெறுக்க பழகுவோம்!

- உங்கள் அண்ணன் ஜோசப் பிரதீப்

Gospel Through Media by Evangelism Team

Philemon & Kingsly in Tamil: **Tamilan TV:** Sunday 7:00 - 7:15 am.
Nambikkai TV: Sunday 3:30 - 4:00 pm.

Rajanayagam & Benny Martin in Tamil: **Nambikkai TV:** Tuesday 6:30-7:00 am & Friday 7:30 - 8:00 am

Arjunan in Tamil: Every Monday - Saturday 6:00 pm on **Joy TV.**

Hindi TV program: Sunny, Francis, & Vinay David: Sunday (7:00-7:30) pm, Friday 8:00-8:30 pm All on **Subha Sandesh** Hindi Channel

P. K. Varghese in Malayalam: Every Saturday 6:00-6:30 am on **Jai Hind TV.**

Joshua & Ricky Gootam in Telugu:
Every Sunday at 6:00-6:30 p.m. on **Subhavartha TV.**
Saturday at 6:00-6:30 a.m. on **Araadhana TV.**
Every day at 7:00 a.m. and 3:00 p.m. on **Kanthi TV** in A. P. only.


Amul Bansod – Aurangabad (Marathi)

MCN News channel: Monday, Wednesday, Friday – 7:30 AM to 8:00 AM.

யோசேப்பின் தாழ்மை குணம்

ஹாய் குட்டீஸ், மீண்டும் இந்த மாதம் கிருபையுள்ள வார்த்தை பத்திரிகை வாயிலாக சந்திப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். ஆதியாகமம் 41 ஆம் அதிகாரத்தில், யோசேப்பு அண்ணா உயர்த்தப்படுவதை குறித்து நாம் படிக்கலாம்.

சென்ற மாதம் எகிப்தின் ராஜாவாகிய பார்வோன் கண்ட கனவிற்கு, யோசேப்பு அண்ணா விளக்கம் சொன்னார் அல்லவா! அந்த விளக்கம் ராஜாவாகிய பார்வோனுக்கும், எகிப்தின் மக்களுக்கும் சரியானது என்று கண்டு, யோசேப்பு அண்ணாவை எகிப்து நாட்டிற்கு அதிகாரியாக உயர்த்தும்படி பார்வோன் ராஜா எண்ணினார். அப்பொழுது பார்வோன் தன் வேலைக்காரரை எல்லாம் பார்த்து, தேவ ஆவியைப் பெற்ற இந்த மனுசனை போல வேறு ஒருவன் இல்லை என்றான். இந்த காரியங்கள் நீ சொன்னபடியினால் விவேகமும் ஞானமும் உள்ளவன் வேறு ஒருவனும் இல்லை என்று சொல்லி, பார்வோன் தன் கையில் இருந்த முத்திரை மோதிரத்தை கழற்றி, யோசேப்பு அண்ணாவின் கையில் போட்டுவிட்டு, எகிப்து தேசம் அனைத்திற்கும் அதிகாரியாக உயர்த்தி வைத்தான்.



என் அருமை பிள்ளைகளே! யோசேப்பு அண்ணா ஏன் உயர்த்தப்பட்டார்? எதற்காக உயர்த்தப்பட்டார்? என்று படிக்கலாம். பார்வோன் ராஜா தான் கண்ட கனவிற்கு விளக்கம் சொல்லும்படி யோசேப்பு அண்ணாவை அழைத்துக் கொண்டு வந்தபொழுது, யோசேப்பு, ராஜாவைப் பார்த்து கனவிற்கு விளக்கம் சொல்பவன் நான் அல்ல, எனக்கு அந்த அளவுக்கு அறிவும், ஞானமும் இல்லை. இதை வெளிப்படுத்துகிறவர் பரலோகத்தின் சர்வ வல்லமையுள்ள கர்த்தர் என்று சொன்னார். யோசேப்பு அண்ணா கர்த்தரை உயர்த்தி, எல்லா காரியங்களிலும் கர்த்தரை முன்னிலைப் படுத்தினார். இந்த காரியத்தினாலேயே கர்த்தர் பார்வோன் ராஜாவைக் கொண்டு, யோசேப்பு அண்ணாவை உயர்த்தினார்.

கர்த்தருக்கு பிரியமான பிள்ளைகளே! நீங்களும் உயர்த்தப்பட வேண்டுமா? உங்களுடைய எல்லா காரியங்களிலும் கர்த்தரை உயர்த்தி, அவரை முன்னிலைப்படுத்துங்கள். கர்த்தருக்கு முன்பாக தாழ்மையாய் இருங்கள். நம் ஆண்டவர் இயேசுவைப்போல எல்லாவற்றிலும் பிதாவை மகிமைப்படுத்துவோம். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

வார்த்தை வசனம்: யாக்கோபு 4:10

"கர்த்தருக்கு முன்பாகத் தாழ்மைப்படுங்கள், அப்பொழுது அவர் உங்களை உயர்த்துவார்.

– சகோ. பீட்டர்

சாலொமோன் ஆலயத்தையும், அரண்மனையையும் கட்டுதல்

கிறிஸ்துவுக்குள் அன்பான செல்லப்பிள்ளைகளா!! அனைவரும் நலமாக இருக்கிறீர்களா? கர்த்தருடைய நாமத்தினாலே உங்கள் அனைவருக்கும் வாழ்த்துக்கள்!!!. பரிசுத்த கர்த்தர் தாமே உங்கள் அனைவருடனும் இருந்து உங்களை ஆசீர்வதிப்பாராக.

சாலமோன் கர்த்தருடைய நாமத்திற்கு ஒரு ஆலயத்தையும், தான் ஆட்சி செய்வதற்கு ஒரு அரண்மனையையும் கட்டுவதற்கு திட்டம் செய்கிறார். அந்த கட்டிட வேலையில் சுமை சுமப்பதற்கு எழுபதினாயிரம் பேரையும் (70,000), மரங்களை வெட்டுவதற்கு எண்பதினாயிரம் பேரையும் (80,000), இவர்களை நிர்வகிப்பதற்காக மூவாயிரத்து ஆறுநூறு பேரையும் (3,600) ஏற்படுத்தினான்.

தீரு என்கிற நாட்டின் அரசனாகிய ஈராம் என்றவரிடத்தில் ஆள் அனுப்பி, தான் கட்டிடம் கட்டுவதற்கு தேவையான கேதுரு மரங்களை தனக்கு வழங்கும்படி சாலமோன் வேண்டிக்கொண்டார். தீருவின் ராஜாவாகிய ஈராம் சாலமோனுக்கு உதவுவதாக ஒப்புக்கொண்டார். பின்பு சாலமோன் எருசலேமில் தன் தகப்பனாகிய தாவீதிற்குக் காண்பிக்கப்பட்ட மொரியா என்னும் மலையில்



எபூசியனாகிய ஒர்னானின் களம் என்னும் தாவீது குறித்து வைத்த இடத்திலே கர்த்தருடைய ஆலயத்தை கட்டுவதற்கு துவங்கினான்.

சாலமோனின் ஆட்சியின் நான்காம் வருடம் ஆலயத்தின் கட்டுமானம் தொடங்கப்பட்டது. அது சுமார் 7 ஆண்டுகளில் நிறைவடைந்தது, ஆலயத்தை கட்டி முடித்தபிறகு, சாலமோன் தனது அரச அரண்மனையை கட்ட துவங்கினான். அரண்மனையின் கட்டுமானப் பணி முடிய 13 வருடங்கள் ஆனது.

சாலமோன் கர்த்தருக்கு ஆலயம் கட்டினான். அதிலும் கர்த்தரை மகிமைப்படுத்துவதற்காக முதலாவது தேவாலயத்தைக் ஆலயத்தை கட்டிமுடித்துவிட்டுதான் தனக்கான அரண்மனையை கட்டினான். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் எதைச் செய்தாலும், முதலில் கர்த்தருக்கு மகிமை செலுத்தும்படி செய்ய வேண்டும். நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து சொல்கிறார், "முதலாவது தேவனுடைய ராஜ்ஜியத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள் அப்பொழுது இவைகள் எல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும் என்றார்." சிறுபிள்ளைகளாகிய நாமும், முதலாவது எந்த ஒரு செயலைச் செய்தாலும், கர்த்தருக்கு மகிமை செய்துவிட்டு, அவருடைய வசனத்தின்படி செய்தால், நம்முடைய அனைத்து செயல்களிலேயும் கர்த்தர் நம்மை ஆசீர்வதிப்பார்.

மனப்பாட வசனம்: மத்தேயு 6:33

"முதலாவது தேவனுடைய ராஜ்ஜியத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள் அப்பொழுது இவைகள் எல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்."

– சகோ. சந்தோஷ்குமார் மாகாளியப்பன்

அசரியா ராஜாவின் நல்ல ஆட்சி

கடவுளுடைய செல்லங்களா! நீங்கள் எல்லாரும் எப்படியிருக்கிறீர்கள், நல்லாயிருக்கிறீர்களா?

இந்த மாதம் அசரியா இராஜாவின் நல்ல ஆட்சியைப் பற்றி கற்றுகொள்ளலாமா?

இந்த அசரியா என்பவர் இராஜாவானபோது என்ன வயது தெரியுமா? 16வயது (2இரா ஜா. 15 : 2,3).

முன்னாடி ஒரு காலத்துல, அசரியா அப்படின்னு ஒரு அண்ணன் இருந்தாங்க. அவங்களுக்கு உங்க அண்ணன் மாதிரி, அக்கா மாதிரி 16 வயசுதான் ஆச்சு. ரொம்ப சின்ன பையன்!

ஆனா, ஒருநாள் அந்த நாட்டு மக்கள் எல்லாரும் வந்து, அவங்களுக்கு தலையில ஒரு பெரிய தங்க கிரீடத்தை வச்சாங்க. இனிமே நீங்கதான் எங்களோட ராஜா! அப்படின்னு சொல்லிட்டாங்க.

சின்ன பையன் அசரியாவுக்கு பயமா இருந்திருக்கும்ல?

ஐயோ! நான் எப்படி எல்லாரையும் பாத்துக்குவேன்? அப்படின்னு அவங்க பயப்படவும் இல்ல, அழவும் இல்ல!

அவங்க என்ன தெரியுமா செஞ்சாங்க? கண்ணை மூடி, கைகளைக் கூப்பி, கடவுளே எனக்கு உதவி செய்யுங்க அப்படின்னு நல்லா ஜெபம் செஞ்சாங்க.

அம்மா, அப்பா பேச்சைக் கேட்கிற நல்ல பிள்ளை மாதிரி, கடவுள் சொன்ன பேச்சை அப்படியே கேட்டாங்க. தப்பான காரியம் எதையுமே செய்யல.

கடவுள் இந்த சின்ன பையனான அசரியாவைப் பார்த்து, வாவ்! நீ எவ்வளவு நல்லப் பிள்ளை! அப்படின்னு சந்தோஷப்பட்டார். அசரியாவுக்கு நிறைய புத்திசாலித்தனத்தைக் கொடுத்தார். அவனால அந்த நாடே ரொம்ப சூப்பரா, சந்தோஷமாக இருந்துச்சு!

கடவுளின் செல்லங்களா? இதிலிருந்து என்ன பாடம் உங்களுக்கு:

1 . நான் சின்னப் பிள்ளை என்று நினைக்கக் கூடாது (தன்னம்பிக்கை)



அசரியா 16 வயதிலேயே பெரிய ராஜாவா இருந்தாங்க. அதைப்போல நீங்களும் சின்னப் பிள்ளையா இருந்தாலும், உங்களால நிறைய நல்ல காரியங்களைச் செய்ய முடியும் (உதாரணம்: அம்மா, அப்பாவுக்கு சின்ன சின்ன உதவி செய்யலாம், சபையில் பாட்டு புத்தகம் எடுத்து வைப்பது)

2. பெரிய பொறுப்பு வரும்போது பயப்படக் கூடாது (ஜெபம்):

ஸ்கூல்ல லீடராகப் போடும்போதோ அல்லது புதுசா ஒரு போட்டியில் கலந்து கொள்ளும்போதோ பயம் வந்தால், அசரியா மாதிரி உடனே கடவுள் கிட்ட ஜெபம் செய்யனும். கடவுள் உங்களுக்கு உதவி செய்வார்.

3. கீழ்ப்படிதலே ஆசீர்வாதம்:

அசரியா கடவுளின் பார்வைக்குச் செம்மையானதை (நல்லதை) செய்தார். நாமும் அம்மா, அப்பா, டீச்சர்ஸ் பேச்சைக் கேட்டு நல்ல பிள்ளையாக நடக்கும்போது, கடவுள் நம்மை எல்லாரும் பாராட்டும்படி பெரிய ஆளாக மாற்றுவார்.

மனப்பாட வசனம்: எபேசியர் 6:1

"பிள்ளைகளே, உங்கள் பெற்றோருக்குக் கர்த்தருக்குள் கீழ்ப்படியுங்கள், இது நியாயம்."

— சகோ. அன்பு ஏசுதாஸ்

யோனாவின் கோபமும், கடவுளின் பொறுமையும்

ஹாஸ் குட்டீஸ்! உயிர்த்தெழுந்த ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன், கர்த்தர் நினிவே பட்டணத்திற்கு செய்வேன் என்று சொன்னதை செய்யாமல் போனதினால் யோனாவிற்கு இந்த காரியம் மிகுந்த கோபத்தை உண்டாக்கினது.

யோனா கர்த்தரை நோக்கி: நான் என் தேசத்தில் இருக்கும்போதே நான் இதைச் சொல்லவில்லையா? இதினிமித்தமே நான் முன்னமே தர்ஷீசுக்கு ஓடிப்போனேன்; நீர் இரக்கமும், மன உருக்கமும், நீடிய சாந்தமும், மிகுந்த கிருபையுமுள்ளவரும், தீங்குக்கு மனஸ்தாபப்படுகிறவருமான தேவனென்று அறிவேன். மேலும் நான் உயிரோடிருக்கிறதைப் பார்க்கிலும் சாகிறது நலமாயிருக்கும் என்றான். அதற்குக் கர்த்தர்: நீ எரிச்சலாயிருக்கிறது நல்லதோ என்றார்.

அதன்பிறகு, யோனா நகரத்திலிருந்து புறப்பட்டு, நகரத்துக்குக் கிழக்கே போய், அங்கே தனக்கு ஒரு குடிசையைப் போட்டு, நகரத்துக்குச் சம்பவிக்கப் போகிறதைத் தான் பார்க்குமட்டும் அதின் கீழ் நிழலில் உட்கார்ந்திருந்தான்.

யோனாவுடைய தலையின்மேல் நிழலுண்டாயிருக்கவும், அவனை அவனுடைய மனமடிவுக்கு நீங்கலாக்கவும்



தேவனாகிய கர்த்தர் ஒரு ஆமணக்குச் செடியை முளைக்கக் கட்டளையிட்டு, அதை அவன்மேல் ஓங்கி வளரப்பண்ணினார்; அந்த ஆமணக்கின்மேல் யோனா மிகவும் சந்தோஷப்பட்டான். ஆனால் மறுநாளிலே கர்த்தர் ஒரு பூச்சியை அந்தச் செடியை அரித்துப்போட வைத்தார். அதினாலே அது காய்ந்து போயிற்று. சூரியன் உதித்தபோது யோனாவின் தலையில் பட்டதினால் அவன் சோர்ந்து போய் தனக்குள்ளே சாவை விரும்பினான்.

அப்பொழுது தேவன் யோனாவை நோக்கி: நீ ஆமணக்கினிமித்தம் எரிச்சலாயிருக்கிறது நல்லதோ என்று கேட்டார். மேலும் நீ வளர்க்காததும் ஒரே இரவில் முளைத்து அழிந்து போனதுமான ஆமணக்குக்காக கவலைப்படுகிறாயே?

வலது கைக்கும் இடது கைக்கும் வித்தியாசம் அறியாத 1,20,000 பேருக்கு மேல் மனுஷர்களும் நிறைய மிருக ஜீவன்களும் இருக்கிற பெரிய நகரமாகிய நினிவேக்காக நான் கவலைப்படாமல் இருப்பேனா? என்று கேட்டார்.

குட்டீஸ்! இந்த சிறிய பாடத்திலிருந்து, நீங்கள் என்ன கற்றுக்கொண்டீர்கள்? கர்த்தர் உங்களது வாழ்வில் எது சிறந்தது, உங்களுக்கு எவைகள் அவசியம், என்ன தேவைகள் என்பதை நிச்சயம் அறிந்திருக்கிறார். ஏற்ற வேளையிலே அவைகளை தருவார். ஆனால் யோனாவைப் போல பொறுமையாயிராமல், அதை இப்பொழுதே தாரும், இன்றைக்கே செய்யும் என்று அடம்பிடித்தல் கூடாது. ஏனெனில், கடவுள் மிகுந்த பொறுமையுள்ளவரும், இரக்கக்குணம் கொண்டவரும், மன்னிக்கிறவருமாயிருக்கிறார் என்பதையும் நம் கற்றுக் கொண்டோம் அல்லவா! எனவே, அவருடைய பிள்ளைகளாகிய நாமும்கூட கடவுளைப்போல பொறுமையாயிருந்து, நமக்கு வேண்டியதை பெற்றுக் கொள்வோமாக. கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக.

மனப்பாட வசனம்: சங்கீதம் 40:1

"கர்த்தருக்காகப் பொறுமையுடன் காத்திருந்தேன்; அவர் என்னிடமாய்ச் சாய்ந்து, என் கூப்பிடுதலைக் கேட்டார்."

— சகோதரி குயினி பிரதீப்

ஓராண்டில் திருமறையை வாசித்து முடிக்க....



ஆகஸ்ட் - 2026

	காலை		மாலை	
	ரோமர்		சங்கீதம்	
1.	4	☐	57-59	☐
2.	5	☐	60-62	☐
3.	6	☐	63-65	☐
4.	7	☐	66,67	☐
5.	8:1-21	☐	68,69	☐
6.	8:22-39	☐	70,71	☐
7.	9:1-15	☐	72,73	☐
8.	9:16-33	☐	74-76	☐
9.	10	☐	77,78	☐
10.	11:1-18	☐	79,80	☐
11.	11:19-36	☐	81-83	☐
12.	12	☐	84-86	☐
13.	13	☐	87,88	☐
14.	14	☐	89,90	☐
15.	15:1-13	☐	91-93	☐
16.	15:14-33	☐	94-96	☐

	காலை		மாலை	
	ரோமர்		சங்கீதம்	
17.	16	☐	97-99	☐
	1 கொரிந்தியர்			
18.	1	☐	100-102	☐
19.	2	☐	103,104	☐
20.	3	☐	105,106	☐
21.	4	☐	107-109	☐
22.	5	☐	110-112	☐
23.	6	☐	113-115	☐
24.	7:1-19	☐	116-118	☐
25.	7:20-40	☐	119:1-88	☐
26.	8	☐	119:89-176	☐
27.	9	☐	120-122	☐
28.	10:1-18	☐	123-125	☐
29.	10:19-33	☐	126-128	☐
30.	11:1-16	☐	129-131	☐
31.	11:17-34	☐	132-134	☐

★ கொடுக்கப்பட்டுள்ள வேதாகம பகுதிகளை வாசித்து முடித்தவுடன் அருகில் உள்ள கட்டத்தில் ☑ செய்யவும்..

வேதாகமத்தை முறையாக கற்றுக்கொள்ள: 92 4421 4421, 92 4431 4431

அடுத்த இதழில்

பொதுவான செய்திகள் — மெரீனா கடற்கரை



இந்தியாவின் சென்னை நகரில் அமைந்துள்ள ஒரு நகர்ப்புறக் கடற்கரை ஆகும். இதன் நீளம் 13 கி.மீ. ஆகும். இந்தியாவின் கிழக்குக் கடற்பகுதியில் அமைந்துள்ள மெரீனா, இந்திய மாநகரங்களில் ஒன்றான சென்னையின் கடல் எல்லையை வரைவு செய்வதாயும் அதன் அடையாளங்களில் ஒன்றாகவும் அமைந்துள்ளது. இது இந்தியாவின் மிக நீளமான நகர்ப்புற கடற்கரை ஆகும். மும்பை நகரின் பாறைகள் நிறைந்த ஜுகு கடற்கரையைப் போன்று அல்லாமல், மெரீனா கடற்கரை மணற்பாங்காக உள்ளது. இக்கடற்கரையை ஒட்டி புகழ்பெற்றோரின் உருவச்சிலைகள், நினைவிடங்கள், சமாதிகள் அமைந்துள்ளதால், இது சென்னை நகரின் சுற்றுலா தலங்களில் ஒன்றாகவும் விளங்குகிறது.

ஜூலை மாத கேள்விகள்

(யோவான் சுவிசேஷ புத்தகத்தில் இருந்து)



1) ஆதியிலே இருந்தது எது?
2) தேவனால் அனுப்பப்பட்ட மனுஷன் யார்?
3) இயேசுவைக் குறித்து சாட்சி கொடுத்தவர் யார்?
4) கேபா என்பதற்கு அர்த்தம் என்ன?
5) நீ எனக்கு பின் சென்று வா இயேசு யாரை அழைத்தார்?
6) வந்து பார் என்று யார் யாரிடம் கூறியது?
7) கபடற்ற உத்தம இஸ்ரவேலன் யார்?
8) பெரிதானவைகளைக் காண்பாய் யார் யாரிடம் கூறியது?
9) கலியாணத்திற்கு அழைக்கப்பட்டவர்கள் யார்?
10) இயேசு தம் மகிமையை வெளிப்படுத்தின முதல் அற்புதம் எங்கே நடந்தது?

பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் : 05-08-2026

அனுப்ப வேண்டிய முகவரி : **சகோதரி. பேபி ராஜா**
45C/1, சர்ச் லேன், காரனேசன் தெரு,
அரசரடி, மதுரை - 625 016.
செல் : 92 4421 4421, 92 4431 4431

சென்ற இதழின் பதில்கள்

1. லூக்கா 17:26
2. லூக்கா 19:2,3
3. லூக்கா 19:29
4. லூக்கா 20:27
5. லூக்கா 21:15
6. லூக்கா 21:19
7. லூக்கா 22:3
8. லூக்கா 22:32
9. லூக்கா 23:33
10. லூக்கா 24:34

சென்ற இதழின் கேள்விகளுக்கு பதில் எழுதியவர்கள்

1) P.S. ருக்மணி - ஈரோடு
2) Mrs. சாந்தி ஜோயல் - திருச்சி
3) A. ரோஸ்மேரி - சென்னை
4) J. கிறிஸ்டோபர் சாந்தகுமார் - மதுரை
5) A. டேவிட் ஜெயசந்திரன் - மதுரை
6) S. ஜெனிபர் சில்வியா - நெல்லை
7) C. வைலட் கிறிஸ்டோபர் - தளவாய்புரம்
8) Dr. இவாஞ்சலின் ஜோன்ஸ் - சேலம்
9) S. டேவிட் சாந்தகுமார் - செங்கோட்டை
10) R. ஞானசிரோன்மணி - மதுரை
11) J.G. ரோசலின் ஜோசப் - நெல்லை
12) J. தாமஸ் ராபின்சிங் - பெரம்பலூர்
13) Mrs. தெல்மா ஸ்டான்லி - மதுரை
14) Mrs.P. சமாதானம் பீட்டர் - விருதுநகர்
15) Mrs. சாந்தி வில்லியம் - புதுக்கோட்டை
16) A. லலிதா - புதுக்கோட்டை
17) G. ஏஞ்சலம்மாள் - மதுரை
18) Mrs. பியூலா ஜேசுராஜன் - புதுவை
19) Mrs. ஷெலன் திலக் - தூத்துக்குடி
20) Mrs. பெட்ரீஷியா டேவிட் - சேலம்
21) J.V. சுந்தரபாய் வில்லியம் - சேலம்
22) R. சரோஜா - தென்கலம்
23) Mrs. M. ஜெனி ஈஸ்வரி - கரூர்
24) Dr. ஆட்லின் ஆனந்தன் - மதுரை
25) A. அரவிந்த் - மதுரை
26) M. ராஜா - கரூர்
27) Mrs. ஸ்டெல்லா ஜெபக்குமார் - நெல்லை
28) J. ஜான்சி - ஆனைமலை
29) N. ஜான் செல்லையா - மதுரை
30) J. ஜெயராணி ஜான் - மதுரை
31) Mrs. C. வள்ளி சிதம்பரம் - கரூர்
32) S. கார்த்திக் - கரூர்
33) Mrs. சூரிய பிரியா - மதுரை
34) Mrs. இந்திரா பாண்டி - மதுரை
35) Mrs. ராணி குமரன் - கரூர்
36) M. அன்பழகன் - தங்கமேடு
37) Mrs. பெரில் பாஸ்கர் - படப்பை
38) A.P. ராஜா - சென்னை
39) Mrs.A. சந்திரா - மதுரை
40) A. கார்பஸ் பிலேமோன் - மதுரை
41) Mrs. A. அன்னத்தாய் ஆல்பர்ட் - தூத்துக்குடி
42) Mrs. A. இமல்டா சுந்தர்சிங் - ஈரோடு
43) Mrs. A. இமல்டா சுந்தர்சிங் - ஈரோடு
44) Mrs. ஷெப்ஸிபா தாமஸ் - படப்பை
45) N. ஞானசுந்தரி நாகராஜன் - பாளையங்கோட்டை
46) Y. ஜெயசுதா பொன்செல்வி - சென்னை
47) Mrs.D. குளோரி திலகவதி - சென்னை
48) M.S. ஜேம்ஸ் - திண்டுக்கல்
49) Mrs. தேவி ராஜாசிங் - திருப்பூர்
50) Mr. டேவிட் ராஜ் - அனவரதநல்லூர்
51) Mrs. J. பூங்கொடி ரவி - முத்தூர்

தொடர்ந்து இப்பகுதியில் பங்குபெறும் அனைவருக்கும் வாழ்த்துக்கள் !

Place of Publication : 45 C/1, CHURCH LANE, CORONATION STREET, ARASARADI, MADURAI - 16.
Printed & Published by P.C. PHILEMON RAJAH
Printed at THEE CLASSIC PRINTERS, 27, KAKA THOPPU, MADURAI - 1 94421 23819
Registered News Paper No. : TNTAM/2011/42166
Postal Registration No. : TN/MA/67/2024 - 2026
Date of Publication : 9th July 2026
Posted at Arasaradi HPO on 10th & 11th July 2026

கிருபையுள்ள வார்த்தை வெளியிட்டுள்ள சிறப்பு புத்தகங்கள்



அன்பார்ந்த வாசகர்களே! இந்த அனைத்து புத்தகங்களையும் உங்கள் ஆத்மீக வளர்ச்சிக்கு பயன்படுத்திக்கொள்ளும்படி வேண்டுகிறோம். ரூபாய் 100/- மட்டும் அனுப்பி இப்புத்தக தொகுப்பை பெற்றுக்கொள்ளுங்கள்!

தபால் வழி பைபிள் பாடங்கள்



கைபிரதிகள்



உங்கள் சுவிசேஷ ஊழியத்திற்கு கைபிரதிகள் பல்வேறு தலைப்புகளில் மாத விலையில் கிடைக்கும். விபரங்களுக்கு : 92 4421 4421, 92 4431 4431

BIBLE STUDY BOOKS IN ENGLISH





AVAILABLE FOR SPECIAL PRICE!

If undelivered please return to :

EDITOR
KIRUBAIYULLA VAARTHAI
P.O. Box No. 15, Arasaradi,
Madurai - 625 016. India
biblecourseindia@gmail.com
@graciouswordcoc
92 4421 4421, 92 4431 4431

To